ENC-5-TA

# இன்றைக்கு கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 5

நீங்கள் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளில் தேவன் உங்களை ஊக்குவிக்கும் அனுபவத்தை பெற விரும்புகிறீர்களா? பெரும்பாலானவர்கள் ஒவ்வொருநாளும் உலகத்தையே தங்கள் தோள்களில் சுமந்து நடப்பது போன்ற உணர்வுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை சோர்வடையவும் குழப்பமடையவும் செய்யும் பிரச்சனைகள் சூழ்ந்திருப்பதை உணர்கிறார்கள். அவர்கள் அதிகமாக கவலை படுகிறார்கள். வாழ்க்கையே கைமீறி போனது போல தோன்றுகிறது. இதன் விளைவாக, அவர்கள் தங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு கடினப்படுவதோடு சந்தோஷமாக இருப்பது அரிதானதாக காண்கிறார்கள். அப்படிப்பட்ட உணர்வுதான் உங்களுக்கும் இருக்கிறதா? மற்றவர்களுக்கு பல சந்தேகங்கள் இருக்கலாம். உங்கள் கடந்த கால பாவங்களை தேவன் மன்னித்துவிட்டார் என்று உங்களுக்கு எப்படி நிச்சயமாக தெரியும்? அல்லது, நீங்களே கேட்டிடலாம், "ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வதும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவித்து ஒவ்வொரு நொடியும் சமாதானத்தோடு இருப்பது எப்படி?

ஜான் அன்கெர்பேர்கின் இந்த நிகழ்ச்சியில் நாங்கள் பதிலளிக்க இருக்கும் கேள்வி: " ஏன் தேவன் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரையும் சிட்சிக்கிறார்?" சிட்சைக்கும் தண்டனைக்கும் உள்ள வேறுபாடு என்ன? தேவன் உங்களை சிட்சிக்கும்போது நீங்கள் ஏன் மனம் தளர்ந்துபோக கூடாது?" நிகழ்ச்சியில் இணைந்துகொள்ள உங்களை அன்போடு அழைக்கிறோம்.

******

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வரவேற்கிறோம். இன்றைக்கு நமது தலைப்பு மிகவும் சுவாரஸ்யமான ஒன்று தேவன் தம்முடையவர்களை சிட்சிக்கிறார். ஏன் அப்படி நடக்கிறது, இந்த விஷயத்தில் ஏன் மனம் தளர்ந்திபோகாமல் இருக்க வேண்டும். எல்லா கிறிஸ்தவர்களுக்கும் இந்த வசனம் தெரியும் ரோமர் 8:28: "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." பொதுவாக கிறிஸ்தவர்கள் இக்கட்டான நிலைவரும்போது இந்த வசனத்தை குறிப்பிடுவார்கள், அவர்களுடைய வேலையை இழக்கும்போது, கடினமான சூழ்நிலை வரும்போது சொல்வார்கள். அப்படி சொல்வதால், என்ன சொல்கிறோம் என்றால், "ஆமா, தேவன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்னுடைய நல்லதுக்காகாதா தேவன் இந்த காரியங்களை அனுமதித்திருக்கிறார் என்று நம்புகிறேன் என்றிடுவோம்."

இன்றைக்கு இன்னும் சற்று உன்னிப்பாக கவனிக்க இருக்கிறோம் தேவன் நமது வாழ்வில் என்ன நடக்குமென்று சொல்கிறார் என பார்க்கலாம். இந்த துவக்கமான நாம், 2 கொரிந்தியர் 1ல், அப்போஸ்தலனாகிய பவுல் தான் சந்தித்த பிரட்சனையை பற்றி சொல்வதை பார்க்க விரும்புகிறேன். அவர் சொல்கிறார், " ஆகையால் சகோதரரே ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை என்னவெனில் எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று." 2 கொரிந்தியர் 1:8

இப்போது ஒரு நிமிடம் நிறுத்தி கிறிஸ்தவர்களும் கடினப்பாதையில் செல்வார்கள் என்பதை தெரிவித்துகொள்கிறேன். இன்றைக்கு சில சபைகளில் தவறாக போதிக்கிறார்கள் நீங்க எந்தமாதிரியான சூழ்நிலையை எதிர்கொண்டாலும், தேவன் உங்களுக்கு நிச்சயம் முழுமையான ஜெயத்தை தருவார் என்கின்றனர் அது வியாதியாக இருந்தாலும், நீங்க நிச்சயமா சுகம் பெறுவீர்கள்; பொருளாதாரத்தில் தரித்திர நிலையிருந்தால், உங்களுடைய தேவைக்கும் மிஞ்சின பணம் உங்களுக்கு வரும் என்கிறார்கள். உங்கள் குடும்ப வாழ்வில் பிரச்சனை இருந்தால், அதுவும் நன்மைக்கேதுவாக மாறும் என்பார்கள். இந்தமாதிரியான அனுபவம் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உண்டாகவில்லை. அவர் ஆசியாவில் அதிக பாரமான உபத்திரவம் இருந்ததாக சொல்கிறார். பவுல் உபதிரவப்பட்டார், அவர் போதுமான அளவு ஜெபிக்காததால் அப்படியாகவில்லை அல்லது இந்த கடின சூழல்களை நீக்கும்படி தேவனிடம் சொல்ல மறந்ததால் உண்டாகவில்லை. இல்லை, பவுல் தான் கிறிஸ்தவர்களுக்கு சொல்கிறவராக இருந்தார் 1 தெசலோனிக்கேயர் 5:17-18ல் இடைவிடாமல் ஜெபிக்க சொல்கிறார், எபேசியர் 6:18 எப்போதும் ஜெபிக்கும்படி சொல்கிறார். பவுலினுடைய சொந்த வாழ்க்கையில் இருந்து கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் கடினமான நிலையை மாற்றும்படி தேவனிடம் ஜெபித்தாலும் தேவன் அப்படி

செய்வதில்லை என்பதை கற்றுகொள்கிறோம். ஆனால் அந்த இக்கட்டான சூழ்நிலைகளை நாம் கடக்கும்போது நமக்கு பெலனளித்து சமாதானத்தை தருவதாக வாக்களிக்கிறார்.

பவுல் எழும்போதும், “எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டாயிற்று என்கிறார்.” இதை இப்படியும் சொல்லலாம், அவர் சந்தித்த சூழ்நிலைகள் அவரை முற்றிலும் பிழிந்து எடுத்தது. அதை எதிர்கொள்வதற்கு அவருக்கு போதிய சுய பெலமும் தன்மையும் இல்லாமல் இருந்தது. அது அதிக பாரம் என்கிறார், “பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்று இருந்தார்களாம்.” (2 கொரிந்தியர் 1:8) வேறுவிதமாக சொன்னால், அதை எதிர்கொள்ள முடியும் என்று அவருக்கு தோனல. இந்த சூழ்நிலையை நான் மேற்கொண்டு நிற்ப்பேன் என்ற எண்ணத்தை அவர் விட்டுவிட்ட நிலையில் தான் இருந்திருக்கிறார். நீங்களும் அப்படிதானா?

அடுத்து பவுல் சொல்கிறார், “நாங்கள், மரணம் வருமென்று எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.” 2 கொரிந்தியர் 1:9/ கவனிங்க மரணம் வந்ததுபோல இருந்ததாம் தலைக்கு மேல கத்தி இருப்பதுபோல, இருந்தது என்கிறார். நீங்களும் இந்தமாதிரியான உணர்வோடு இருக்கீங்களா? அந்த அளவிற்கு சோர்ந்துபோய் இருக்கீங்களா? உங்களுக்கு சக்தியும் பலமும் குன்றிபோயிருக்கிறதா? பிழைப்போம் என்ற நம்பிக்கை இல்லாம இருக்கீங்களா? சரி, அந்த மாதிரியான நிலையைத்தான் பவுல் அனுபவித்ததாக சொல்கிறார்.

அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனித்து பாருங்கள். இந்த கடினமான சூழ்நிலைகள் எதனால் வந்தது என்கிறார். அதற்கு காரணம் இதுதான்: “நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல் தேவன் மேல் நம்பிக்கை வைக்கும்படி.” 2 கொரிந்தியர் 1:9 பவுல் பயங்கரமான உணர்விற்குள்ளாக கடந்துசென்றார், பிழைப்போம் என்கிற நிலையில்லை, இக்கட்டான சூழ்நிலை வந்தது அதினால் அவனுடைய சொந்த முயற்சிகள் முடிவிற்கு வந்துவிட்டது என்ற நிலையை அடைந்து – சொந்த பெலமும் சக்தியும் இல்லாமல் – இபோதும் முழுவதுமாய் தேவனை சார்ந்துக்கொள்ள துவங்கினார். இந்த கடினமான சூழ்நிலையினால் பவுல் தனது சுயநம்பிக்கையை விட்டுவிட்டு தனது சொந்த பெலத்தால் இந்த சூழ்நிலையை எதிர்கொண்டு மீள முடியாது என்பதை புரிந்துகொண்டார். நம்முடைய வாழ்விலும் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் தேவனை நம்ப வேண்டும். இப்போது அதை தான் நீங்கள் கற்றுக்கொண்டு இருக்கிறீர்களா?

இந்த நிலையில் தானே, வேதம் போதிக்கிறது எபிரேயர் 12:5-11ல், “என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே, கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துகொல்லுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களை புத்திரராக எண்ணி நடத்துகிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கும் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாய் இருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மை சிட்சிகும் போது அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க நாம் பிளைக்கதக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா! அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார். எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய் காணும் ஆகிலும், பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனை தரும்.”

ஓரிரண்டு காரியங்கள் இங்கே இருக்கிறது: ஒன்று, வேதம் போதிக்கிறது ஒவ்வொரு கிறிஸ்தவரும், தேவனுடைய ஒவ்வொரு உண்மையான குமாரனும் குமாரத்தியும், அவர்களுடைய வாழ்வில் தேவனுடைய அன்பின் சிட்சையை அனுபவிப்பது நிச்சயம். சரி, ஒரு நிமிடம் இதை யோசித்து பாருங்கள். நீங்க தகப்பனாகவோ தாயாகவோ இருக்கிறீர்கள் உங்களுக்கு பிள்ளைகள் இருக்காங்க, அவர்கள் தங்கள் கரங்களை எரிந்துகொண்டிற்கும் அடுப்பின் மீது வைக்க போவதை பார்த்தாலோ, கீழ் விழறமாதிரி நாற்காலியில் உட்கார்ந்தாலோ, நீங்க என்ன செய்வீங்க? அவர்களை நீங்கள் நேசிப்பதால், அவர்களை கண்டித்து ஒழுக்கத்தை கற்றுதருவீர்கள். நீங்க அவங்ககிட்ட, “அதை செய்யாது” என்று சொல்லி விளக்கிடுவீர்கள்.

சில குழந்தைகள் உடனே கீழ்ப்படியும். பெற்றோரின் வார்த்தைகளை அவர்கள் நம்புவார்கள். சிலர் அப்படி இல்லை, அதன் விளைவாக, மறுபடியும் அவர்களை கண்டிக்க வேண்டியிருக்கும், சிலசமயம் அவர்களை அடித்து புரிய வைக்க வேண்டியிருக்கும். முதல் முறை தண்டனை சிறியதாக இருக்கும், ஆனா அந்த பிள்ளை தொடர்ந்து கீழ்படியலனா, தண்டனையை பெரிதாக்கிட வேண்டியிருக்கும். உங்களுடைய இலட்சியம் அந்த கேடான பழக்கத்திலிருந்து அவங்க விடுபடணும். அவங்க நல்லதுக்குதா செய்கிறோம். மேலும், நீங்க உங்க பிள்ளைகளை அன்போடு கண்டித்து சிட்சித்தாலும், சில சமயங்களில் கடினமான விதத்தில் கற்றுகொள்ளும்வரை அவர்கள் கீழ்ப்படியாமையும் நிலையிலேயே நின்றுகொண்டிருப்பார்கள். அவங்க கைய வெறுப்பில வைக்க அது சுட்டுவிடும். அல்லது படிகளை தாண்டி குதிக்க கீழ விழுந்து காயமடைவார்கள். அவங்களுக்கு அடிபட்ட பிறகு அது வலிக்கும் போது, தங்கள் பெற்றோர் அவர்களிடம் சொன்னது அவர்களுடைய நன்மைக்குதான் என்பதை புரிந்துகொள்வார்கள்.

இது அடுத்த குறிப்பிற்கு நம்மை நடத்துகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை தண்டிக்க வேண்டும் ஊக்குவிக்க கூடாது என்பதற்காக கண்டித்து நடத்துவதில்லை. இல்ல, இதற்கு எதிர்மாறாக, தங்கள் குழந்தைகளை நேசிப்பதால்

அவர்களை கண்டித்து நடத்துகிறார்கள். தேவனுக்கும் இது பொருந்துவதாக இருக்கிறது. தேவன் உங்களை நேசிக்கிறார். நாம் பாவி என்பதை ஒப்புக்கொண்டு கிறிஸ்துவை நமது இரட்சகராக ஏற்று அவரை நம்பும்போது, தேவன் என்ன செய்கிறார்? அவர் நம்மை தமது பிள்ளைகளாக ஏற்று கொண்டு அவருடைய பிள்ளைகளை நடத்துவதை போல நடத்துகிறார்.

வேதம் சொல்கிறது, "அவரை கிறிஸ்துவை ஏற்றுகொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் அவருடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." யோவான் 1:12

இயேசு சொல்கிறார், "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என்னுடைய சித்தத்தின்படி அல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன். அதாவது கிறிஸ்துவினிடத்தில் அழைத்துவரப்பட்ட நாம் ஒருபோதும் அவரை விட்டு விலகக்கூடாது என்பதுதான் பிதாவின் சித்தம்

அவர் எனக்கு தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல் கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தம். குமாரனை கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனை கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்." யோவான் 6:37-39

ஆகா தேவன், தமது மிகுந்த கிருபையினால், தமது அன்பை நம்மீது பொழிந்திருக்கிறார், நித்திய ஜீவன் என்ற இவை கொடுத்து நமக்கு வரவேண்டிய தண்டனையை தமது குமாரன் சிலுவையில் சுமந்து தீர்க்கும்படி செய்ததால் இன்றைக்கு நமது பாவங்களில் இருந்து மன்னிப்பை  பெற்று நிற்கிறோம். இதை நாம் விசுவாசிக்கும் நொடியில், தேவன் நமக்காக இவை அனைத்தையும் செய்தார் என்ன நம்பினால் அவரோடு நல்ல அன்பின் உறவிற்குள் பிரவேசித்திடுவோம். அவர் நமது அன்பான பரலோக தந்தை. அவரோடு நடக்க துவங்கிடுவோம், நம்முடிய நன்மைக்காக எப்படி வாழ்வதென்று அவர் கற்றுத்தருவார் என நம்பிடுவோம்.

இதிலிருந்து மூன்றாவது காரியத்திற்கு வருகிறோம். தேவனுடைய வழிநடத்துதல்களுக்கு உணர்வுள்ளவர்களாய் இருந்து கீழ்ப்படிந்தால், அவருடைய சிட்சை குறைவாயிருக்கும், அவரை நாம் பின்பற்றவேண்டும் என்று அவர் விரும்புகிறார். தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் வசனங்களை உபயோகித்து நம்மை நடத்துகிறார், தேவனோடுள்ள உறவை காத்து வாழ்ந்திட தேவையான சத்துவத்தி பெலத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளிடுவார்.

மூன்றாவது, தேவன் வார்த்தை கூறுகிறது ரோமர் 8:29ல் (இது நமக்கான இன்னொரு நோக்கம்) "தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." தேவனுடைய இலக்கு நம்மை கிறிஸ்துவின் சாயலை யுடைவர்களாய் மாறப்பண்ணுவது. இதற்கு என்ன அர்த்தம்? எப்படி நாம் கிறிஸ்துவை போல ஆக முடியும்? அநேகர் நினைக்கிறார்கள் இயேசுவை போல சுதந்தரமாக வாழ்ந்த நபர் யாருமே இல்லை என்று. அவரிடத்தில் சகல வல்லமைகளும் இருந்தது சகல ஞானமும் இருந்தது அவர் யாரையும் சார்ந்திருக்க அவசியமில்லாமல் இருந்தது. ஆமா, அவர் தேவனுடைய குமாரன், அப்படி இருந்தாலும், வேதாகமத்தின்படி, இயேசு பரலோக பிதாவை சார்ந்திருப்பது எப்படி என்பதற்கு நமக்கு உதாரணமாக வாழ்ந்தார்.

உதாரணமாக, யோவான் 6:38ல் இயேசு சொல்கிறார், "என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்." மேலும் அவர், " என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பினவருடையதா யிருக்கிறது என்றார்." யோவான் 7:16

இயேசு இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவை சார்ந்திருந்தார் தமது வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும், வேலையிலும், போதனையிலும் சார்ந்திருந்தார். இயேசு செய்த அற்ப்புதங்கள் மற்றும் மனுக்குலத்தின் பாவத்திற்காக அவர் சிலுவையில் தியாக பலியாக மரித்ததும் இயேசுவுக்கான பிதாவின் சித்ததில் பங்காக இருந்தது. எனவே நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருக்க வேண்டும் என்பது தேவ சித்தம் என்று வேதம் சொல்லும்போது, இதை தான் போதிக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் எப்படி இயேசு பிதாவை சார்ந்திருந்தாரோ அப்படி இருக்க கற்றுக்கொள்ளவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

இயேசுவை போல, நாமும் பிதா நம்மை வழிநடத்த விட்டுகொடுக்கவேண்டும் அனுமதிக்கவேண்டும், நமது தேவைகளை சந்திக்கும் காரணராக நிறுத்திடவேண்டும். நமது முக்கிய பாதுகாப்பு பிதாவாகிய தேவனிடமிருந்து கிடைக்கிறது; நமது வாழ்வில் சரியான இலக்குகளை அமைத்திட அவரை நோக்கி பார்க்க வேண்டும். என்ன வேலை  செய்வதென்று அவரிடம் கேட்க வேண்டும்; யாரை திருமணம் செய்வது; பிள்ளைகளை வளர்ப்பது எப்படி. இவை எல்லாவற்றிலும் நாம் பிதாவை சார்ந்திருந்து அவருக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அதை எதிர்க்கும்போது, பாவம் செய்யும்போதும், நமது வாழ்விற்கான தேவ திட்டத்தை ஒதுக்கி தள்ளிடும்போது, அவர் தமது பிள்ளைகளை அன்போடு சிட்சிப்பதாக அவர் கூறுகிறார். நாம எப்படி நடக்கணுமோ அந்த பாதையில் சரியாய் நடக்கும்படி நம்முடைய நலனுக்காக அப்படி செய்கிறார்.

******

பில் கிரஹாம் தமது புத்தகத்தில் எழுதியிருக்கும் கருத்தை நான் ஏற்றுகொள்கிறேன், லைப் டைம் கேரன்டீ புத்தகம், கிறிஸ்தவர்கள் அறியாமையினால் வழிவிலகும்போதும் எதிர்த்து செயல்படும்போதும் தேவன் சகலமும் என்ற ரோமர் 8:28ன் காரியங்களை நமது வாழ்வில் அனுமத்திக்கிறவராக இருக்கிறார். இந்த சகலமும் அல்லது அந்தமாதிரியான சூழ்நிலை நம்முடைய கவனத்தை ஈர்த்து நம்மை தேவனை சார்ந்திருக்கும் நிலைக்கு கொண்டுவருகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இதை கற்றுக்கொள்ள வேண்டியிருப்பதை ஒப்புகொள்கிறார். இயேசுவின் சீர்ஷர்களும் இதை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எல்லா கிறிஸ்தவர்களும் காலாகாலமாக, எபிரேயர் 12ன்படி, ஒருசில கட்டங்களில் சிட்சிக்கப்பட்டு இருக்கிறார் என்பது உண்மை. (எபிரேயர் 12:5-6)நீங்களும் நானும்கூட தேவனால் சிட்சிக்கபட வாய்ப்பிருக்கிறது என்று அர்த்தமாகும்.

நம்முடைய நித்திய பாதுபாப்பு இந்த காரியத்தை அடங்கியிருப்பதில்லை. இல்லை. அது தேவனுடனான மாமது உறவின் அடிப்படையில் உள்ளது. தேவ குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாவதில் உள்ளது.

அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்வில் இருந்து இதை பற்றி தியானிக்க முடியுமா என்று பார்க்கலாம். அவர்தான் சிறந்த உதாரணம் என நினைக்கிறன். வேதத்தின் படி நமக்கு தெரிந்தவரை பேதுரு, தனது சுய பெலத்தை அதிகமாய் நம்பியிருந்த ஒரு நபர் என்பதை அறிந்துகொள்கிறோம். அவருக்கென்று தனிப்பட்ட சுய கொள்கைகளும் கோட்பாடுகளும் இருந்தது. எந்த கடினமான சூழ்நிலையிலும் விட்டுகொடுத்து போக கூடியவராக அவர் காணப்படவில்லை. மற்றவர்களை வைத்து ஒரு வேலையை செய்து முடிக்க முடியாவிட்டால், தாமே அதை செய்துமுடிக்க முடியும் என்ற சுய நம்பிக்கை உடையவர்; ஒருபோதும் விட்டுவிட மாட்டார்; ஒரு காரியத்தை எப்படியும் செய்து முடித்திடுவார். தோற்றுபோவதைவிட சாவது மேல் என்பார். உங்கள் குணமும் அதுதானா?

இந்த பேதுருதான் கர்த்தரிடம் கூறினான் லூக்கா 22:33ல், “ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மை பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்றான்.” அவன் இதை சொன்னபோது, பேதுரு தனது சுய பெலத்தை நம்பியிருந்தான். தனது சொந்த திறமைகளில் அவன் நம்பிக்கை கொண்டிருந்தான். அவன் எப்போதும் அதை தனக்கு முன்பாக வைத்திருந்தான். இதில் பிரட்சனை என்னன்னா, அவனது விசுவாசம் தவறான காரியத்தில் இருந்தது; அது தேவன் மீது இருக்கவேண்டும், அவன் மீது இருக்க கூடாது. இதை வசிக்கும்போது எனக்கு சுவாரஸ்யமாக இருந்தது இயேசு பேதுருவுக்கு பதில் சொல்கிறார். இயேசு அவனிடம் லூக்கா 22:34ல் சொல்கிறார், “ பேதுருவே, உனக்கு சொல்லுகிறேன், இன்றைக்கு சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்.”

சரி, தேவைபட்டால் இயேசுவோடு தானும் காவலிலும் சாவிலும் உடன் இருப்பேன் என்று சொல்லும்போது இயேசுவுக்கு முன்னால் பேதுரு பெருமை பேசிக்கொண்டிருந்தானா? இல்லை. நீங்க யோவான் பதினெட்டை கவனித்து பாருங்க, பேதுரு உண்மையாக பேசினான் என்பதை பார்க்க முடியும். யோவானில் சொல்லப்படும்போது யூதாஸ் இயேசுவை காட்டி கொடுக்கும்படி வருவதை பார்க்கிறோம். அங்கு, “யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான்.” யோவான் 18:3

சில வல்லுனர்கள் சொல்கிறார்கள் போர்சேவகரின் கூட்டத்தில் அறநூறு ஆண்கள் இருந்தார்களாம். இயேசுவை பிடிக்க ஆயுதமேந்திய அறநூறு பேர் வர்றாங்க. இங்க பேதுரு என்ன செய்கிறான்? வேதம் சொல்கிறது, “ அப்போது சீமான் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்.” யோவான் 18:10. இதை சிந்தித்து பாருங்கள். பேதுரு தனது பட்டயத்தை எடுத்துகொண்டு 600 பேரையும் தாக்க ஆயத்தமாக தான் இருந்தான். 600 பேருக்கு விரோதமாக ஒருவன், இது கேட்கவே கொஞ்சம் கேலியா இருக்குல்ல. இதில் என்ன தெரிகிறதென்றால் இயேசுவுக்காக தான் மரிக்கவும் தயார் என்று பேதுரு சொல்லும்போது, அதை உண்மையாக சொல்கிறான். இப்ப இயேசு என்ன செய்கிறார்? இயேசு வேலைக்காரனுடைய காதை குணப்படுத்தி பேதுருவிடம் சொல்கிறார், “உன் பட்டயத்தை உறையிலே போடு.” அதற்கு பிறகு இயேசுவை போர்சேவகர்கள் பிடித்து கொண்டு போனார்கள் என்று சொல்லப்படுகிறது. தொடர்ந்து வேதம் கூறுகிறது, “பேதுரு இயேசுவையும் போர்சேவகர்களையும் தூரத்திலே பின்தொடர்ந்து சென்றான்.” லூக்கா 22:54 அவனுக்கு குழப்பமும் கவலையும் உண்டானது, அடுத்த என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் திகைத்துகொண்டிருந்தான்.

அடுத்த பேதுருவை பற்றி வாசிக்கும்போது, இயேசுவை வியாகுலப்படுத்தின இடத்தில் அவன் நெருப்பண்டையில் உட்கார்ந்திருந்தான்.ஒரு வேலைக்காரி அவனை பார்த்து, “நீயும் இயேசுவோடு இருந்தவர்களில் ஒருவனல்லவா என்றாள்?”

பேதுரு என்ன செய்தான்? அதை மறுதளித்தான். அவன் சொல்கிறான், “ஸ்திரீயே, அவரைநான் அறியேன்.”

சற்றுநேரத்திற்கு பின்பு, இன்னொரு பெண் அவனிடம் வந்து, இவன் கலிலேயன்தான் என்று சாதித்தாள்."

அதற்கு பேதுரு, "நீ சொல்லுகிறதை அறியேன் என்றான்." எதார்த்தமான விதத்தில் தனது கோழைத்தனத்தை அவன் நிருபித்துவிட்டான். இதை யோசித்து பாருங்க. இரண்டு சிறு பிள்ளைகளாய் அவனை தோற்கடித்தனர். கிறிஸ்துவை அவன் மறுதலித்த உடனே, சேவல் கூவினது அப்போது பேதுரு இயேசு தன்னிடத்தில் கூறியதை நினைவுகூர்ந்தான். அதோடு அவன், இயேசுவினிடத்தில் சொன்னவைகளையும் அவன் நினைவுகூருகிறான், "யார் உம்மைவிட்டு போனாலும், நான் போகமாட்டேன் என்றிருந்தான்."

இங்கு என்ன நடந்தது? இயேசு பேதுருவிடம் சொன்னார், "சீமோனே, சீமோனே, சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுகொண்டான், இதில் உங்களை என்பது பன்மையை குறிக்கிறது – இதில் மற்ற சீஷர்களும் அடங்குவார்கள். ஆனால் நானோ உன் விசுவாசம் (ஒருமை, பேதுருவுக்கு மட்டும்) சீமோனோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி வேண்டிக்கொண்டேன். நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்." லூக்கா 22:31 உண்மையாகவே. சாத்தான் பேதுருவை புடைக்கும்படியாக தேவனிடம் உத்தரவு பெற்றிருந்தான். வெளிப்படுத்தல் 12:10 கூறுகிறது, "சாத்தான் இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக சகோதரர்கள் மேல் குற்றஞ்சாற்றுகிறவனாயிருக்கிறான்."

யோபு 1:9ல் சாத்தான் சோபை குற்றப்படுத்தினான், தேவனுக்கு முன்பாக நீதிமானாய் குடமற்றவனாக இருந்தவன். சகரியா 3:1ல் சாத்தான் தேவனுக்கு முன்பாக பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை குற்றப்படுத்தினான். இந்த சூழ்நிலைகள் அனைத்தையும் கவனிக்கும்போது, தேவன் கட்டுப்பாட்டில் இருப்பதை கவனிக்க முடியும். சாத்தான் நம்மை சோதனைக்குட்படுத்த தேவனிடத்தில் உத்தரவு பெற வேண்டும். பேதுரு தனது சொந்த பெலத்தை சார்ந்திருந்தது தேவனுக்கு தெரியும், அவனுடைய சுய நம்பிக்கையை, தனது திறமையில் இயேசுவை பின்பற்று அவருக்காக செயல்பட முடியும் என்று நம்பியிருந்தான். தேவன் அவனுடைய இந்த தைரியத்தை அகற்ற பேதுருவை அவனுடைய கட்டுப்பாட்டை மீறி நாடக்கும் ஒரு சூழ்நிலையில் அவனை தள்ளி அவனை ஒரு கோழையாக நிற்கும்படி செய்தார். பேதுரு எந்த சூழ்நிலையையும் சந்தித்து எதிர்கொள்ள தன்னிடம் போதிய பெலமும் திறமையும் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டிருந்தான், நீங்களும் அப்படிதானா?

தேவனிடம் அவன் வாக்குறுதி கொடுத்தால் அவனுக்கு அவர் கீழ்ப்படிவார் என்று நம்பினான், அதனால் அவர் மீதிருந்து அந்த காரியத்தை அகற்றிட நினைத்தான். வேறுவிதமாக சொன்னால், தேவனை ஈர்க்கும்விதமான உத்தம குணம் அவனிடம் இருந்தது. அவனுடைய பாதையில் எந்தவிதமான போராட்டம் வந்தாலும் அதை தானே தனது சுய பெலத்தால் மேற்கொள்ள முடியும் என்று நினைத்துகொண்டிருந்தான். இந்த எண்ணம் தான் பேதுருவுக்குள் பல ஆண்டுகளாக இருந்து வந்தது. ஆனா பேதுரு இப்ப சுக்குநூறாக உடைந்துவிட்டான். அவன் தோற்றுபோய் மூன்று முறை இயேசுவை மறுதலித்த பிறகு, சேவல் கூவியதும் இயேசு சொன்ன வசனங்களை அவன் உடனே நினைவுகூர்ந்தான். அதை அவன் புரிந்துகொண்ட வெளியே போய் மனங்கசந்து அழுதான்.

பிறகு, உடைக்கப்பட்ட இந்த அனுபவத்திற்கு பிறகு பேதுரு சரியாக செயல்பட்டான். தேவன் அற்புதமாய் அவனை மன்னித்தார். அவனுடைய கோழைத்தனத்தை அகற்றி அவனது தைரியத்தை திரும்ப தந்தார். ஆனால் அவர் சொல்கிறார், "இப்போது நீ என்னை முழுமையாய் நம்புவாய், என் பெலத்தை நம்பிடுவாய். உன்னுடைய தைரியம் உன்னுடையதாக இருக்காது, உன் மூலம் கிரியை செய்யும் எனது பரிசுத்த ஆவியாக இருக்கும். அது அன்போடும் கனிவோடும் இருக்கும், சுய பிரயோஜனமாக சுயநலமாக இருக்காது. ஜனங்கள் உன்னில் கிறிஸ்துவை கண்டு என்னுடைய நாமத்திற்கு மகிமையையும் கனத்தையும் செலுத்துவார்கள் என்றார்."

உங்களுக்கு ஒன்று கேட்கட்டுமா? உங்களுடைய வருவாயின் இறுதி நிலைக்கு வந்திருக்கிறீர்களா? நீங்க தேவனுடைய வல்லமையை மட்டும்தான் நம்பியிருக்கிறேன் என் தேவைக்கு அவருடைய பலத்தை சார்ந்திருக்கிறேன் என்று சொல்ல முடியுமா? நாம சிலவற்றை பிடித்துகொண்டிருந்தால், நம்முடைய விருப்பப்படி செயல்பட்டால், நம்முடைய அன்பின் பரலோக பிதா நம்மை சிட்சித்து அவருடைய தேவை நமக்கு இருக்கிறது என்பதை புரிந்துகொள்ளும்படி செய்வேன் என்கிறார். இப்படி செய்வதற்கு அவருக்கு பல வழிகள் இருக்கிறது. நம்முடைய முரட்டாட்ட குணத்தை பயன்படுத்தி, நம்முடைய பிடிவாதத்தை நமக்கே பாதகமாக்கிடுவார், சாத்தானுக்கு கூட அனுமதி அளித்திடுவார், நம்முடைய வாழ்வின் ஒரு பகுதியை தொட அதிகாரமளித்திடுவார். தேவன் எப்போதும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார், நம்மை சுற்றி ஒரு எல்லையை வைத்திருக்கிறார், ஆனா அவர் அன்போடு நம்மை சிட்சிக்கிறார். தனிப்பட்ட முறையில் நம் ஒவ்வொருவரோடும் இடைபடுவார்.

எபிரேயர் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது தேவனுடேய் சிட்சைய்கை பெறும்போது, அதை அற்பமாக எண்ணக் கூடாது. அதை நாம் ஒதுக்கி தள்ளிட கூடாது. மனம் தளர்ந்து நிற்க கூடாது, நாம் விட்டுவிடவும் கூடாது. தேவன் தாம் அன்பு கூருகிறவனை சிட்சிக்கிறார் என்று அறிந்திருக்க வேண்டும். நாம என்ன செய்யணும்? தேவனுக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும், நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை கற்றுக்கொள்ள வேண்டும், தொடர்ந்து முன்னேறி செல்லனும். அதுதான் நல்லது. வேதம் சொல்கிறது நான் அப்படி செய்தால், தேவனுடைய சிட்சையானது பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனை தந்திடும். (எபிரேயர் 12)

இப்போது நீங்கள் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தால் உங்களால சொல்ல முடியுமா, “தேவனே, என்னை ஒப்படைக்கிறேன். எனக்கு என்ன போதிக்க நினைக்கிறீர்?”உங்கள் வாழ்வில் பாவம் இருந்தால் அதை அறிக்கை செய்திடுங்கள். தேவன் உங்களை தண்டிக்க விரும்புவதில்லை. அவர் உங்களை அன்பினால் சிட்சிக்கிறார், உங்களுடைய நலனுக்காக, அவர் தான் உங்களுக்கு காரண கர்த்தா என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என விரும்புகிறார்.

அடுத்த வாரம் வேதம் கூறுகிற மற்றொரு தலைப்பை பற்றி பார்க்க இருக்கிறோம்: மரண பயம்: மரணத்தை எதிர்கொண்டிருப்பவர்கள் மரண பயத்தோடிருப்பவர்களுக்கு தேவன் என்ன சொல்லுகிறார்? கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் மரித்த அடுத்த நொடி அவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று தேவன் வாக்களிக்கிறார்? அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.